<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.23/2018</u>
<u>28.01.2026</u>

2026ம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.T. சோமு உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = ஜெசிமேரி | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==========================================================

**<u>DW 2 முதல் விசாரணை</u>**

நான் இலால்குடி மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். வருவாய் வட்டாட்சியர் அவர்கள், இவ்வழக்கு தொடர்பாக என்னை சாட்சியம் அளிக்க கேட்டு கொண்டதன் அடிப்படையில் ஒப்புதல் கடிதத்துடன் வழக்கில் கோரப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஆஜராகியுள்ளேன். மேற்படி கடிதம் **<u>சா.சா.ஆ.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாளாடி கிராம நத்த சர்வே எண்.201/4க்கு பழைய புல எண்.43B க்குரிய நத்தம் நில வரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் **<u>சா.சா.ஆ.2</u>** ஆகவும், மேற்படி கிராம புல எண்.201க்குரிய புல வரைபடம் **<u>சா.சா.ஆ.3</u>** ஆகவும், மேற்படி கிராம புல எண்ணுக்குரிய நத்தம் பட்டா எண்.18 கணினி பதிவிறக்க நகல் **<u>சா.சா.ஆ.4</u>** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி கிராம நத்தம் நில வரி திட்டம் 1995ம் வருடம் தொடப்புடையதாகும். சர்வே எண்.201/4க்கு வடக்கில் சர்வே எண்.201/3, தெற்கில் சர்வே எண்.201/5 உள்ளது. மேற்படி சர்வே எண்.201/3 மற்றும் 201/5 முழுவதும் கட்டிடப்பகுதி. சர்வே எண்.201/4 ல் மேற்கிலும்,

கிழக்கிலும் கட்டிடம் உள்ளது, மற்ற பகுதிகள் காலியாக உள்ளன. சர்வே எண்.201/4 ல் தெற்கில் கிழமேலாக 5 அடி அகலத்திற்கு சந்து உள்ளது. மேற்படி சந்து சர்வே எண்.201/4 க்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.201 க்கு கிழக்கு பகுதி தென்வடலாக ரோடு உள்ளது. அந்த ரோட்டின் சர்வே எண்.201/19 ஆகும். சர்வே எண்.201 க்கு மேற்கில் நெடுஞ்சாலை உள்ளது, அதன் சர்வே எண்.163 ஆகும். சர்வே எண். 201/4 உட்பிரிவு 201/5 ஐ விட மேற்கு பகுதியில் உள்ள ரோட்டைவிட கிழக்கே தள்ளியும், கிழக்கு பகுதியில் தெரு பக்கம் நீண்டும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.201/4, 201/3, 201/2 ஆகிய சர்வே எண்களில் மேற்கில் ஒரே நேர்கோடாக உள்ளது. சா.சா.ஆ.4 ஆவணம் யார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் அப்பாவு பிள்ளை மற்றும் இரண்டு நபர்கள் பெயரில் உள்ளது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவா சர்வே எண்.201/4 வாளாடி கிராமத்தில் உள்ளது. புல வரைபடத்தை பொறுத்து சர்வேயரால் தான் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்க முடியும் என்றால் புல வரைபடம் தயார் செய்வதற்கு சர்வேயரால் மட்டுமே முடியும், மேற்படி புல வரைபடத்தை வருவாய் துறை அதிகாரிகள் பார்த்து சாட்சியம் அளிக்க முடியும். நான் சொல்வது போல் பிரச்சனைக்குரிய சந்து சர்வே எண்.201/4 ல் கட்டுப்பட்டதில்லை என்றாலும், சர்வேயரால் மட்டுமே சர்வே எண்.201/4 ல் மேற்படி சந்து கட்டுப்பட்டதா அல்லது இல்லையா என்பது சொல்ல முடியும் என்றால் சரியல்ல. மேற்படி தாவா இடத்தை பொறுத்து நீதிமன்ற ஆணையரை நியமித்து அளந்து பார்த்தால் தான் மேற்படி சந்து சர்வே எண்.201/4 ல் வருகிறதா அல்லது சர்வே எண்.201/5 ல் வருகிறதா என்பதை அறிய முடியும் என்றால் புல வரைபடத்தை

பார்த்தால் சொல்ல முடியும் அறிதியிட்டு சொல்ல வேண்டுமானால் சர்வேயரை வைத்து அளந்து பார்த்தால் தான் சொல்ல முடியும். புல வரைபடத்தை மட்டும் வைத்து மேற்படி சந்து சர்வே எண்.201/4 ல் வருகிறது என்று எனக்கு நிபுணத்துவம் இல்லை என்றால் சரியல்ல.

**Signed,**

ஜெசிமேரி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.